

YOUTH AND MEDIA
NATIONAL PLATFORM FOR THE PROMOTION OF MEDIA SKILLS

இளையோர்களது பெற்றோர்களுக்கானது

# டிஜிற்றல் ஊடகங்களைக் கையாள்வதற்கான விதந்துரைகள்

www.youthandmedia.ch

# தெரிந்திருப்பது நல்லது

**டிஜிற்றல் ஊடகங்கள் இன்றைய உலகில் சர்வவல்லமை பொருந்தியது - இது இளையோர்களுக்குப் பொருத்தமானது.** அவர்கள் ஸ்மாற்போன்கள் மற்றும் இணையத்தளத்துடன் வளர்ச்சியடைந்தவர்கள் என்பதுடன் நிச்சயமாக அதன் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இருப்பினும், அவர்களது ஊடகப்பாவனையின்போது பெற்றோர்கள் மற்றும் வேறு பொறுப்புவகிக்கும் நபர்கள் ஆதரவு வழங்குவது முக்கியமானதாகும்.

**கலந்துரையாடலின்போது உள்ளடக்கம் குறித்தும், அத்துடன் இணையத்தளப் பாவனையின்போது அதனுடன் சேர்ந்துள்ள அபாயங்கள், போன்றவை முக்கிய இடம் வகிக்க வேண்டும் -** இளையோர்கள் பொறுப்புணர்வுடனும் பாதுகாப்புடனும் டிஜிற்றல் ஊடகங்களைக் கையாள்வதே, குறிக்கோளாகும். தகவல்கள் மற்றும் தாம் நடந்துகொள்ளும் முறைகளை விமர்சனத்துடன் கேள்விகேட்கும் நிலை, அவர்களுக்கு இருக்க வேண்டும்.

**எமது விதந்துரைகளால் நாங்கள் உங்களை, சாதகமான மற்றும் ஆற்றல் மிகுந்த விதத்தில் ஊடகங்களைப் பாவிப்பது குறித்த கேள்விகளுடன் நடந்து கொள்வதற்கு உற்சாகப்படுத்த விரும்புகிறோம்,** இளையோர்களுடன் உரையாடலை மேற்கோள்வதுடன், அவர்களது அனுபவங்கள் மற்றும் மதிப்பீடுகளை கவனத்தில் எடுப்பதுடன் டிஜிற்றல் ஊடகங்களைத் தெரிந்துகொண்டு கையாள்வதாகும்.



## விதந்துரைகள்

**படிப்படியாகச் சுதந்திரமாகச் செயற்பட நீங்கள் அனுமதியுங்கள்.**
பொறுப்புணர்வுடன் டிஜிற்றல் ஊடகங்களைக் கையாளும் இளையோர்களைப் பொறுத்தவரை, நீங்கள் ஊடக உலகில் சேர்ந்து வழங்கிவரும் ஆதரவை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால் தொடர்ந்தும் நீங்கள் விருப்பமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதுடன் உரையாடலுக்கு ஆயத்தமாக இருந்துகொள்ளுங்கள்.

**சீரான ஓய்வுநேர நிகழ்வுகளைக் கவனத்திற் கொள்ளுங்கள்.**
இளையோர்கள் டிஜிற்றல் ஊடகங்களுடன் மட்டும் செயலாற்றினால் அதை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள், இதைவிடவும் வேறு ஓய்வுநேரப் பொழுதுபோக்குகளை மேற்கொள்ளலாம் - உதாரணமாக வெளியில் அசைந்து கொள்வது, விளையாடுவது அல்லது சமவயதினரைச் சந்திப்பது போன்றவை. சலிப்பு ஏற்பட்டால் உடனடியாக படத்திரை ஊடகங்களை நாடக்கூடாது. தேவையில்லாமல் தொடர்ந்து படத்திரை பார்ப்பது குறித்து நீங்கள் உரையாடுங்கள். நித்திரைக்குச் செல்லமுன்பு படத்திரை ஊடகங்களைப் பாவிப்பது உறங்குவதைப் பாதிக்கலாம்.

**படத்திரை தவிர்க்கும் நேரத்தை நீங்கள் ஒன்றுசேர்ந்து தீர்மானியுங்கள்.**
இளையோர்களைப் பொறுத்தவரை தீர்மானிக்கப்பட்ட ஊடக நேரத்திலும் பார்க்க படத்திரை அற்ற நேரங்கள் சிறப்பானது. ஒன்றுசேர்ந்து நீங்கள் தெளிவான முடிவை எடுப்பதுடன், அது கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை நீங்கள் அவதானித்துக் கொள்ளுங்கள். தீர்மானிக்கப்பட்டதைக் கடைப்பிடிக்காது-விட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து முன்பாகவே தெரிந்திருக்க வேண்டும்.

**உங்கள் எடுத்துக்காட்டு மாதிரியை நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள்.**
ஊடகங்களைக் கையாள்வதில் பெற்றோர்கள் மற்றும் வேறு பொறுப்புவகிக்கும் நபர்கள் பிள்ளைகள் மற்றும் இளையோர்களுக்கு முன்மாதிரிகையானவர்கள். உங்கள் சொந்த ஊடகப்பாவனை வழக்கத்தை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

**தனிப்பட்ட தரவுகள் மற்றும் இணையத் தொடர்பிலான அறிமுகங்கள் குறித்த அவதானம்.**
தனிப்பட்ட விபரங்கள் மற்றும் படங்களைப் பகிர்வது தனக்கும் பிறருக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பது குறித்து இளையோருடன் உரையாடுங்கள். இணையவழி அறிமுகங்கள் மூலமான முதல் சந்திப்பு, மக்கள் நடமாட்டமுள்ள மற்றும் பொது இடங்களில் மட்டும் இடம்பெறவேண்டும். இதுதவிர ஒரு பொறுப்பான நபரிடம் சந்திப்பதற்கு முன்பாக அதுகுறித்துத் தெரிவித்துக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

**படங்களைக் கையாள்வதில் சட்டரீதியான விடயங்களை நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள்.**

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது சொந்தப் படம் குறித்து உரிமையுள்ளது. பகிர்வதற்கு அல்லது படங்கள் மற்றும் வீடியோக்களை அனுப்புவதற்கு முன்பாக படத்திலுள்ள நபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**வன்முறைக் காட்சிகள் மற்றும் பாலியல் படங்கள் குறித்து நீங்கள் உரையாடுங்கள்.**

தீவிர வன்முறை மற்றும் பாலியல் காட்சிகளை, பிள்ளைகளுக்குக் காட்டுவது, சட்டவிரோதமானது. குறைந்தவயதானவர்களின் பாலுணர்வுப் படங்களைத் தாமே எடுப்பதும், அதை மற்றவர்களுடன் பகிர்வதும் (Sexting), சட்டவிரோத பாலியல் உள்ளடக்கங்களாகக் கருதப்படும். 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை எந்த வழியிலாவது பாலியலுக்குத் தூண்டினால், அது தண்டனைக்குரியதாகும்.

**மிகுந்த மரியாதையுடன் கையாளும் ஒழுங்கு இணையத் தொடர்புகளிலும் இருக்க வேண்டும்.**

இளையோர்கள் தமது கருத்துக்கள் மற்றும் செய்திகளைத் தெரிவிக்கும்போது மிகமரியாதையுடன் நடந்துகொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். ஒரு பிள்ளை இணையத்தில் தாக்குதலுக்கு உள்ளாவதாக உணர்ந்தால், அது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். சைபெர் அழுத்தம், ஏளனப்பேச்சு மற்றும் ஒதுக்குதல்கள் போன்றவற்றிற்கு, மேலதிகமாக ஒரு துறைசார் நபரின் உதவி தேவைப்படலாம்.

**விமர்சன சிந்தனையை நீங்கள் ஊக்குவியுங்கள்.**

பிழையான அறிவிப்புகள் («Fake News») குறித்தும் அவற்றை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பது குறித்தும் கதைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் - உதாரணமாக உற்பத்திகளைத் தரப்படுத்துவது குறித்து அல்லது In-Game வாய்ப்புகள் - விளம்பரம் எவ்வாறு இயக்கப்படுகின்றது என்பது குறித்து விவாதித்துக்கொள்ளுங்கள்.

**வயதுக்கான அனுமதி வழங்கலை நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள்.**

திரைப்படங்களில் வயதுக்கேற்ற அனுமதியை நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள் (FSK போன்றவை) மற்றும் விளையாட்டுக்கள் (PEGI, USK போன்றவை)

**ஊடகங்களுடன் ஒரு சாதகமான மற்றும் ஆக்கம் நிறைந்த சூழலை நீங்கள் ஏற்படுத்துங்கள்.**

டிஜிற்றல் படங்கள், வீடியோக்கள் மற்றும் இசை போன்றவற்றை ஆற்றலுடன் கையாளுமாறு நீங்கள் உற்சாகப்படுத்துங்கள். சுவாரஸ்யமான பொழுதுபோக்கு அனுபவங்களைத்தரும் மிகச் சிறப்பான விளையாட்டுக்கள் மற்றும் வீடியோக்கள் உள்ளன. இவற்றுடன் பெருமளவு தெரிவாக கற்கும் உள்ளடக்கங்கள் மற்றும் பயிற்சிகளை இணையத்தளங்கள் வழங்குகின்றன.

# மேலதிக தகவல்கள்

ஊடக நம்பிக்கையை ஊக்குவிப்பதில் இளையோர்கள் மற்றும் ஊடகங்கள் தேசிய அடித்தளங்களாகும். **பிள்ளைகள் மற்றும் இளையோர் பாதுகாப்பாகவும் பொறுப்புணர்வுடனும் டிஜிற்றல் ஊடகங்களைக் கையாள்வதை, நாங்கள் விரும்புகிறோம்.** ஆகவே நாங்கள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பு நபர்கள் அத்துடன் கற்பிற்கும்- மற்றும் துறைசார் நபர்களுக்கு தகவல்கள், எடுத்துக்காட்டுகள் மற்றும் விதந்துரைகளை வழங்குகின்றோம்: www.youthandmedia.ch

இந்தக் கையேடு 12 மற்றும் 18 வயதுக்கு இடையான பிள்ளைகளின் பெற்றோர்கள், பராமரிப்பு- மற்றும் பொறுப்புவகிக்கும் நபர்களை நோக்காகக் கொண்டது (பிறிமார் பாடசாலைவயது). **இன்னும் இரண்டு மேலதிக கையேடுகள் உள்ளன,** ஒன்று 7 வயதுவரையான குழுக்களுக்கான விதந்துரைகள் (முன்பள்ளி வயதானவர்களுக்கு) அத்துடன் இன்னொன்று இளையோர்களது (6 தொடக்கம் 13 வயதானவர்கள்) பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கானது. **அனைத்துக் கையேடுகளும் 16 மொழிகளில் கிடைக்கும்.** நீங்கள் அவைகளை எமது இணையத்தளத்தில் இலவசமாக அனுப்பிவைக்குமாறு கோரலாம் அல்லது தரவிறக்கிக் கொள்ளலாம்.

இதைவிடவும் எமது இணையத்தளத்தில் மேலதிக தகவல்களுடனான அனைத்து விதந்துரைகள், இணையத் தொடர்புகள் மற்றும் விளக்கங்களை நீங்கள் காணலாம்: **www.youthandmedia.ch/recommendations**

**வெளியீடு செய்தது**
இளையோர் மற்றும் ஊடகங்கள்
ஊடக நம்பிக்கையை ஊக்குவிக்கும் தேசிய அடித்தளம்.
சமூகக் காப்புறுதிக்கான மத்திய அரசதிணைக்களம்
மற்றும்
ZHAW பயன்பாட்டு அறிவியலுக்கான சூரிச் உயர்கல்லூரி
பயன்பாட்டு உளவியல் துறை
ஊடகஉளவியல் துறைசார்குழு
முகாமையாளர்: பேராசிரியர். கலாநிதி. Daniel Süss, MSc Gregor Waller

படங்கள்: Pia Neuenschwander, photopia.ch

கேட்டுப் பெற்றுக்கொள்ளல் (இலவசம்):
BBL, Verkauf Bundespublikationen, CH-3003 Bern
www.bundespublikationen.admin.ch
கேட்டுப் பெற்றுக்கொள்ளும் இலக்கம்: 06.20 2000 318.863.tam
Tamil

©2020 இளையோர் மற்றும் ஊடகங்கள், ஊடக நம்பிக்கையை ஊக்குவிக்கும் தேசிய அடித்தளம், சமூகக் காப்புறுதிக்கான மத்திய அரசதிணைக்களம் / ZHAW பயன்பாட்டு அறிவியலுக்கான சூரிச் உயர்கல்லூரி

Zurich University
of Applied Sciences

zh aw **School of Applied Psychology**

Psychological Institute

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

Federal Department of Home Affairs FDHA
**Federal Social Insurance Office FSIO**